


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351






## மகாராஷ்டிராவின் யவத்மாலிலிருந்து புனே சென்ற பேருந்து

# தீ விபத்து

## 26 பேர் பலி : முதல்வர் நேரில் ஆய்வு, பிரதமர் இரங்கல்

## எக்ஸ்பிரஸ் சாலை தரத்தைக் குறைகூறுவது சரியல்ல:மகாராஷ்டிர அரசு



**புல்தானா, ஜூலை. 02–**

மகாராஷ்டிராவின் யவத்மாலில் இருந்து புனே நோக்கிச் சென்ற பேருந்து சம்ருத்தி மகாமார்க் விரைவுச் சாலையில் புல்தானாவில் திடீரென தீப்பிடித்து விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் சிக்கி 26 பேர் உயிரிழந்தனர். நள்ளிரவுக்குப் பின் 2 மணியளவில் இந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. தீ விபத்தில் சிக்கி மேலும் பலர் பலத்த காயமடைந்தனர்.

பேருந்து விபத்து நடந்த இடத்துக்கு மகாராஷ்டிரா முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவும், துணை முதல்வர் தேவிந்திர பட்னாவிஸும் நேரில் சென்று ஆய்வு செய்து மீட்பு பணிகள் குறித்து கேட்டறிந்தனர். இந்த விபத்தினை அரசு தீவிரமாக எடுத்துக்கொண்டு இனிமேல் இதுபோன்ற தவறுகள் நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்வர் தெரிவித்தார்.

"மகாராஷ்டிராவில் 26 பேர் உயிரிழந்த பேருந்து விபத்துக்கு சாலையின் கட்டுமானத் தரத்தை குறைகூறுவது சரியில்லை" என்று அம்மாநில துணை முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து குறித்து செய்தியாளர்களிடம் பேசிய தேவிந்திர பட்னாவிஸ், "இந்த நேரத்தில் விபத்து நடந்த சம்ருத்தி மகாமார்க் விரைவுச் சாலையின் தரம் குறித்துப் பேசுவது முதிச்சியின்மையைக் காட்டுகிறது. விபத்துக்கு சாலையின் கட்டுமானத் தரம் குறித்து பேசுவது சரியில்லை. இந்த விபத்தில் 26 பேர் உயிரிழந்தனர். 7 பேர் உயிர் பிழைத்து சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்தவர்களை அடையாளம் காண டிஎன்ஏ பரிசோதனை செய்ய வேண்டியது இருக்கிறது.

விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மனித தவறு அல்லது டயர் வெடித்து விபத்து நடந்திருக்கலாம். இப்போது எதுவும் கூற முடியாது. இதுபோன்ற அசம்பாவிதங்களை தவிர்க்க நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஸ்மார்ட் சிஸ்டம் பொருத்த திட்டமிட்டுள்ளோம் ஆனால், அதற்கு கால அவகாசம் எடுக்கும்" என்றார்.

விபத்து குறித்து பிரதமர் மோடி தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துள்ளார். இது குறித்து, "மகாராஷ்டிரா மாநிலம் புல்தானா மாவட்டத்தில் நடந்த பேருந்து விபத்து மிகுந்த வருத்தத்தைத் கொடுத்துள்ளது. எனது பிராத்தனைகளும் எண்ணங்களும் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருடன் இருக்கின்றன. விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ளூர் நிர்வாகம் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புல்தானா பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மகாராஷ்டிரா அரசு சார்பில் ரூ.5 லட்சமும், பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ.2 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கோவில்பட்டி - தமிழ்நாடு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பரமசிவம், துணைத் தலைவர் கோபால்சாமி, சாத்தூர் - தமிழ்நாடு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் இலட்சுமணன், துணைத் தலைவர் பெருமாள்சாமி, அகில இந்திய தீப்பெட்டி தொழில் கூட்டமைப்பின் (All India Chamber of Match Industries) தலைவர் நூர் முகமது, குடியாத்தம் - தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் மகாலிங்கம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ்நாட்டில் தீப்பெட்டி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதை தடுக்கும் வகையில் பிளாஸ்டிக் சிகரெட் லைட்டர் இறக்குமதிக்கு தடை விதிக்க ஒன்றிய அரசை வலியுறுத்தி தடை ஆணை பெற்றுத் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி. கீதா ஜீவன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, கனிமொழி ஆகியோர் உள்ளனர்.

## வானிலை முன்னறிவிப்பு : தமிழகத்தில் ஜூலை 3 தொடங்கி 3 நாட்கள் கனமழைக்கு வாய்ப்பு

**சென்னை , ஜூலை. 02–**

தெற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் வளிமண்டல சுழற்சி, மேற்குதிசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக வரும் ஜூலை 3-ம் தேதி முதல் ஜூலை 5-ம் தேதி வரையிலான 3நாட்களுக்கு தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் பாலச்சந்திரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இன்று ஜூலை 2 ஆம் தேதி, தமிழகம் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

ஜூலை 3 ஆம் தேதி, தமிழகம் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

ஜூலை 4 ஆம் தேதி, தமிழகம் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம்மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

ஜூலை 5 ஆம் தேதி, தமிழகம் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

## பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதியை பெற ஆதார் இணைப்புடன் வங்கி கணக்கு அவசியம் புதுக்கோட்டை அதிகாரி அறிவிப்பு

**புதுக்கோட்டை , ஜூலை. 02–**

பிரதம மந்திரி கிசான் சம்மன்நிதியைபெறஆதார் இணைப்புடன் வங்கி கணக்கு அவசியம் என புதுக்கோட்டை அதிகாரி அஞ்சலக அதிகாரி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் முருகேசன்வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது :- மத்திய அரசின்'பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி'திட்டத்தின்கீழ்பயன் பெறும் விவசாயிகள், ஜூலை முதல் வாரத்தில் வழங்கப்பட உள்ள 14வது தவணை தொகையை பெறுவதற்கு ஆதார் இணைப்புடன் கூடிய வங்கி கணக்கு அவசியம் என அறிவிக்கப் பட்டுள்ளதாகவும், இதனை கருத்தில் கொண்டு விவசாயிகள் அருகில் உள்ள அஞ்சலகங்கள் / தபால்காரர் / கிராம அஞ்சல்ஊழியரை அணுகி, ஆதார் இணைப்புடன் கூடிய இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி கணக்கு துவங்கி பயன் பெறலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறையிலிருந்து பெறப்பட்ட தகவலின் படி தமிழ்நாட்டில் 2.17 லட்சம் விவசாயிகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 8938 ஆயிரம் விவசாயிகளும் ஆதார் இணைப்புடன் கூடிய வங்கிகணக்கு இல்லாமல் இருப்பதாகவும், அவர்கள் அனைவரும் உடனடியாக அஞ்சல்துறையின் கீழ் செயல்படும் இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி துவங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால்காரர் மற்றும் கிராம அஞ்சல் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஸ்மார்ட் போன் மற்றும் பயோமெட்ரிக் சாதனத்தின் மூலம், விவசாயிகள் தங்களின் ஆதார் மற்றும் மொபைல் எண்ணை மட்டும் பயன்படுத்தி e-KYC (விரல் ரேகை மூலம்) மூலம் ஒரு சில நிமிடங்களில் இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி கணக்குதுவங்க முடியும். இதற்காக மாவட்ட வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையுடன் இணைந்து கிராமங்களில் நடத்தப்படும் சிறப்பு முகாம்களை பயன்படுத்தி அல்லது அஞ்சலகங்கள் / தபால்காரர் / கிராம அஞ்சல் ஊழியரை அணுகி இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி கணக்கு துவங்கி பயன்பெறுமாறு அஞ்சல் துறைசார்பில் அழைப்புவிடுக்கப் பட்டுள்ளது.

நாடுமுழுவதும் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஆண்டொன்றிற்கு ரூ.6000/- வழங்கும்'பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி' என்ற திட்டம் 2018-ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் 3 தவணையாக (ரூ.2000/- வீதம்) இந்த நிதி உதவி விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவுவைக்கப்படுகின்றது. திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து இதுவரை 13 தவணைகள் விடுவிக்கப்பட்டுள்ளது. ஆகவே அனைவரும் இந்தியா போஸ்ட் பேமென்ட்ஸ் வங்கி கணக்கை துவங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளபடுகிறார்கள்.

## தி.மலையில் பவுர்ணமி தினங்களில் சிறப்புக் கட்டண தரிசனம் ரத்து அமைச்சர் சேகர்பாபு



**சென்னை , ஜூலை. 02–**

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் பவுர்ணமி தினங்களில் சுவாமி தரிசனம் செய்திட சிறப்பு தரிசனக் கட்டண முறையை முழுமையாக ரத்து செய்து, அனைத்து பக்தர்களும் பொது தரிசனத்தில் விரைவாக சுவாமி தரிசனம் செய்திட இந்த மாதம் முதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியது: பஞ்சபூத தலங்களில் ஒன்றாகவும், நினைத்தாலே முக்தி தரும் தலமாகவும் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் திருக்கோயில் திகழ்கிறது. இங்கு ஈசன் மலை உருவில் ஜோதிவடிவிலேயே அருள் பாவித்து வருகின்றார். இத்திருகோயிலுக்கு மாதந்தோறும் பவுர்ணமி நாட்களிலும், கார்த்திகை தீபத் திருநாளன்றும் தமிழகம் மட்டுமின்றி பிற மாநிலங்கள், வெளிநாடுகளிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சுவாமியின் அருள் பெற்று செல்கின்றனர்.

2023-24 ஆம் ஆண்டுக்கான சட்டப்பேரவை அறிவிப்புகளின்படி, கிரிவலப் பாதையில் புகழ்பெற்ற 10 திருக்கோயில்களின் பிரசாதங்கள் பக்தர்களுக்கு கிடைத்திடும் வகையில் பிரசாத கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திருக்கோயிலில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டம் விரைவில் தொடங்கப்பட உள்ளது. திருவண்ணாமலைக்கு விழா காலங்கள் மற்றும் பவுர்ணமி நாட்களில் வருகைதரும்பக்தர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தந்திடும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் மூலம் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் சிறப்பு ரயில்களை இயக்கிட மாவட்ட நிர்வாகமும், இந்து சமய அறநிலையத்துறையும் தென்னக ரயில்வேக்கு கருத்துருக்களை அனுப்பி நிறைவேற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


இந்நிலையில், மாதந்தோறும் பவுர்ணமி நாட்களில் திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் திருக்கோயிலுக்கு சிறப்பு தரிசனக் கட்டணம் ரூ.50-ன் மூலம் ஆண்டுக்கு சுமார் ரூ.1.32 கோடி வருமானமாக கிடைக்கப் பெற்று வந்த நிலையில் பக்தர்களின் நலன் கருதி, இந்த மாதம் முதல் சிறப்பு கட்டண தரிசனத்தை முழுமையாகரத்துசெய்து, பொது தரிசனத்தின் மூலமாக பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் விரைவாக தரிசனம் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன" என்று அவர் கூறினார்.






இமயமலைத் தொடரில் தெற்கு காஷ்மீரில் இயற்கையாக தோன்றும் அமர்நாத் பனிலிங்கத்தை வழிபட ஆண்டுதோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் புனித பயணம் மேற்கொள்கின்றனர்.காஷ்மீரின் பஹல்காம் மற்றும் பால்டால் ஆகிய இரு வழித்தடங்களில் பக்தர்கள் புனித பயணம் தொடங்கியது. இந்த ஆண்டுக்கான முன்பதிவு கடந்த ஏப்ரலில் தொடங்கியது. இதன்படி அமர்நாத் புனித யாத்திரைக்கு 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் முன்பதிவு செய்துள்ளனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## அறந்தாங்கி அருகே ரூ 11 லட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணி, அமைச்சர் மெய்யநாதன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்



அறந்தாங்கி, ஜூலை.2-

அறந்தாங்கி அருகே அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சி முருகன் குடியிருப்பு பகுதியில் ரூ.11லட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணி, அமைச்சர் மெய்யநாதன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சி முருகன் குடியிருப்பு பகுதியிலிருந்து செல்லும் மயான சாலையை

தார்சாலையாக மாற்றி தரக்கோரி அப்பகுதி மக்கள் சுற்றுச்சூழல்துறை அமைச்சர் மெய்யநாதனிடம் கோரிக்கை வைத்தனர், கோரிக்கையின் அடிப்படையில் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றிய MGNREGS நிதியிலிருந்து ரூபாய் 11 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய தார் சாலை அமைக்கும் பணியினை அமைச்சர் மெய்யநாதன் நேற்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார், தொடர்ந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் தென்னங்கன்றுகள் வழங்கி சிறபித்தார்.

நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், அறந்தாங்கி கிழக்கு ஒன்றியச் செயலாளர் குமார் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சரிதா மேகராஜன் முன்னாள் ஊராட்சித் தலைவர் சுந்தர்ராஜ், முன்னால் கவுன்சிலர் ஜோதிதுரை, இளைஞர் அணி நிர்வாகிகள் ரமேஷ், சுரேஷ், பால்ராஜ் ரவிச்சந்திரன், எல்.ஐ.சி. ரமேஷ் சேகர் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் அப்பகுதியை சேர்ந்த கிராமத்தார்கள் நூற்றுக்கும்மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## ஆவுடையார்கோவில் தாலுகா மீமிசல் அருகே மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம்



ஆவுடையார்கோவில், ஜூலை.2-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா மீமிசல் அருகில் உள்ள அரசநகரிப்பட்டினம் சாதிக்பாட்சாநினைவாக இரண்டாம் ஆண்டு மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம் ஆவுடையார் கோவில் அருகே மீமிசல் அருகே உள்ள அரசநகரிப்பட்டினம் சாதிக்பாட்சா நினைவு மாபெரும் மாட்டு வண்டி எல்கைபந்தயம் நடைபெற்றது.

இதில் 50 மாட்டு வண்டிகள் பங்கேற்றது, இதில் பெரிய மாடு, நடுமாடு, புது பூட்டு ஆகிய பிரிவுகளில் மூன்று பிரிவுகளாகபிரிக்கப்பட்டு மாட்டுவண்டிகள் பங்கேற்றன. குதிரை வண்டி பந்தயமும் நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்ற மாடுகளுக்கு சுமார் 2 லட்சம் ரொக்க பணமும், கேடயமும் வழங்கப்பட்டது. இந்த பந்தயத்தில் புதுக்கோட்டை, தஞ்சாவூர், சிவகங்கை, ராமநாதபுரம்உள்ளிட்ட பல மாவட்டங்களில் இருந்துமாட்டுவண்டிகள் இதில்கலந்துகொண்டது. நிர்ணயிக்கப்பட்ட எல் கையை நோக்கி பந்தயத்தில் கலந்து கொண்ட மாடுகள் சீறிப்பாய்ந்தன சாலையின் இருபுறமும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் நின்று பந்தயத்தை கண்டு களித்தனர், பாதுகாப்பு பணியை மீமிசல் காவல் உதவி ஆய்வாளர் நாகராஜன் சிறப்பு உதவி ஆய்வாளர் காளிமுத்து ஆகியோர் தலைமையில் காவல்துறையினர் மேற்கொண்டனர்.




## அரியலூர் அருகே மணக்குடி கிராமத்தில் வருமுன் காப்போம் திட்ட சிறப்பு மருத்துவ முகாம்



அரியலூர், ஜூலை.2-

அரியலூர் அருகே, வருமுன் காப்போம் திட்ட சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

அரியலூர் அருகே, மணக்குடி கிராமத்தில் உள்ள, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில், தமிழக அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவ துறை மற்றும், அரியலூர் டால்மியா சிமெண்ட் ஆலை நிர்வாகம் இணைந்து நடத்திய, கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாம் நடைபெற்றது. அரியலூர் மாவட்டம், கடுகூர் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் கார்த்திகா தலைமையிலான, மருத்துவ குழுவினர் நடத்திய மருத்துவ முகாம்துவக்க விழாவில், டால்மியா சிமெண்ட் ஆலை சீனியர் மேனேஜர் கோபி ராஜேஷ், துணை மேலாளர் ஹரி பிரசாத், திட்ட அலுவலர் சுதாகரன், திமுக கிளை செயலாளர் அருள் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

மகப்பேறு மருத்துவம், கண் மருத்துவம், புற்றுநோய், பல் மருத்துவம், சித்த மருத்துவம், மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்டவற்றுக்காக நடத்தப்பட்ட இந்த சிறப்பு மருத்துவ முகாமில், சிறுநீரில் சர்க்கரை மற்றும் உப்பு பரிசோதனை, ரத்தத்தில் சர்க்கரை, கொழுப்பு அளவு பரிசோதனை, ரத்த வகைப்படுத்துதல் சோதனை, செமி ஆட்டோ அனலைசர் மூலம் சிறப்பு பரிசோதனை, உள்ளிட்ட ஆய்வாளர் வசதிகளுடன், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் வசதி, இசிஜி பரிசோதனை, ஆரம்பகால புற்றுநோய் கண்டுபிடிப்பு களுக்கான சிறப்பு சிகிச்சை பிரிவு உள்ளிட்ட வசதிகளும், இம்மருத்துவ முகாமில் செயல்படுத்தப்பட்டது.

மேலும் இம் மருத்துவ முகாமில், முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள், உரிய அறுவை சிகிச்சை பெற, மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப் படுவார்கள் என, சுகாதார ஆய்வாளர் மணி தெரிவித்தார். இந்த மருத்துவ முகாமில் அரியலூர் வட்டார சுகாதார ஆய்வாளர் சைமன், மற்றும் பல்வேறு துறை மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## அரியலூர் அருகே கல்லமேடு கிராமத்தில் தீமிதி திருவிழா



அரியலூர், ஜூலை.2-

அரியலூர் அருகே கல்லமேடு கிராமத்தில் தீமிதி திருவிழா நடைபெற்றது

அரியலூர் அருகே ஓட்டக்கோவில் ஊராட்சிக்கு உட்பட்ட கல்லமேடு கிராமத்தில் உள்ள திரெளபதி அம்மன் கோவிலுக்கு கிராம நாட்டாமை ராமலிங்கம் உடையார் மற்றும் பக்த பிரமுகர்கள் முன்னிலையில் காப்பு கட்டி தொடர்ந்து 18 நாட்கள் மகா பாரதம் படிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அதைத்தொடர்ந்து நிறைவு நாளில் அங்குள்ள திறந்தவெளி மைதானத்தில் உருவாக்கப்பட்ட அக்னி குழியில் பாரத பூசாரிகள் உட்பட காப்பு கட்டிய பக்தர்கள்பலரும்தீமிதியில் கலந்து கொண்டனர், பக்தி சிரத்தையுடன் நடைபெற்ற தீமிதி திருவிழாவில் கிராம நாட்டாமை க .ராமலிங்கம் உடையார், பெரியசாமி படையாட்சி கொளஞ்சியப்பன் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சாலையகுறிச்சி மகேஸ்வரி ராமலிங்கம் மற்றும் ஏராளமான பெண்கள் உள்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

## அரியலூர் மாவட்டம் தத்தனூர் எம் ஆர் சி கல்லூரியில் நான் முதல்வன் திட்ட விழா



அரியலூர், ஜூலை.2-

தத்தனூர் எம் ஆர் சி கல்லூரியில் நான் முதல்வன் திட்ட விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அருகே, தத்தனூர் மீனாட்சி ராமசாமி கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற, நான் முதல்வன் திட்டத்தின் கீழ், உயர்கல்வியில் சேர உள்ள பிளஸ் டூ மாணவர்களுக்கான கருத்தரங்கம் நடைபெற்றது. 2022 -2023 ஆம் கல்வியாண்டில், மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற, ஜெயங்கொண்டம் ஆண்டிமடம் செந்துறை மற்றும் தா.பழூர் வட்டாரங்களை சேர்ந்த மாணவ, மாணவிகள், உயர்கல்வியில்சேர்வதற்கு வழிகாட்டும் சிறப்பு முகாம்துவக்கவிழாவுக்கு, அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா தலைமை வகித்தார். மாவட்ட முதன்மைகல்வி அலுவலர் விஜயலட்சுமி வரவேற்று பேசினார், தத்தனூர் மீனாட்சி ராமசாமி கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம். ஆர். ரகுநாதன் முன்னிலை வகித்தார்.

ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், உடையார்பாளையம் வருவாய்கோட்டாட்சியர் பரிமளம், அரியலூர் வருவாய்கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன்,மாவட்ட பள்ளி கல்வி ஆய்வாளர் பழனிச்சாமி உள்ளிட்ட பலர் பேசினர்,பிளஸ் டூ தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகள் பலரும், பங்கேற்ற இக்கருத்தரங்கில், மாவட்ட அளவிலான பல்வேறு துறை வல்லுநர்கள் பேசினர்.

## புதுக்கோட்டையில் மருத்துவர் தினத்தையொட்டி இலவச சர்க்கரை நோய் பரிசோதனை ஆலோசனை மற்றும் பல் பரிசோதனை முகாம்



புதுக்கோட்டை, ஜூலை.2-

புதுக்கோட்டை மாவட்டத்தில் மருத்துவர் தினத்தையொட்டி இலவச சர்க்கரை நோய் பரிசோதனை ஆலோசனை மற்றும் பல் பரிசோதனை முகாம் காலை 7 மணி முதல் 9 மணி வரை புதுக்குளம் வளாகத்தில், புதுக்கோட்டை சிட்டி ரோட்டரிசங்கத்தலைவர் அசோகன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக வருகை தந்த அனைவரையும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத் தலைவர் கண.மோகன்ராஜா வரவேற்றார்.

நிகழ்ச்சியில் நகர் மன்றத்தலைவர் திலகவதி செந்தில், துணை தலைவர் லியாகத் அலி சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைத்தனர், டாக்டர்கள் ராஜேந்திரன் வெங்கடேசன், சித்த மருத்துவர் செ.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், முகாம் மருத்துவர்களாகடாக்டர் துரை நாகரத்தினம் கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனை வழங்கிப் பேசும்போது பொதுவாக இரண்டாம் வகை சர்க்கரை நோய் என்பது ஆறு வருடங்களுக்கு மேல் முறையாக கையாளா விட்டால் பாதங்களில் எரிச்சல் மதமதப்பு தன்மை செருப்பு கழண்டு போகும் உணர்வு கூட இல்லாத பாதங்கள் வர வாய்ப்புகள் அதிகம். எதிர்காலத்தில் நீரிழிவு நோயினால் உடலில் ஏற்படக்கூடிய பாதிப்புகளில் மிக முக்கியமான பாதிப்பு காயங்கள் ஏற்பட்டால் ஆறாமல் போவது இது போன்ற பிரச்சனைகளால் எதிர்காலத்தில் பாதங்களையோ அல்லது விரல்களையோ அகற்றும் சூழ்நிலை ஏற்படுகிறது, இதை கருத்தில் கொண்டு முகாமில்கலந்துகொண்ட அனைவருக்கும் முறையான விழிப்புணர்வை விரிவாக விவரித்து உணவு முறைகள் உடற்பயிற்சி அதனுடன் மருந்துகளின் உதவிகள் உடன் சர்க்கரை நோயை எதிர்கொள்வது எப்படி என்று யோசனை வழங்கப்பட்டது.

மேலும் முகாம் மருத்துவர்களாக டாக்டர் ஜெய் பிரகாஷ், தரணீஸ்வரி பல் பரிசோதனை செய்து ஆலோசனை வழங்கினர், நிகழ்ச்சியில் உடனடி முன்னாள் தலைவர் சிவக்குமார், வருங்கால தலைவர் தங்கராஜ், வழக்கறிஞர் சந்திரசேகர், செல்வரத்தினம், நாகரத்தினம், சேகர், பரமசிவம், ராஜா நகர்மன்ற உறுப்பினர்கள் கனகஅம்மன் பாபு,ராஜா முகமது மற்றும் பலர் கலந்து கொண்டனர், நிகழ்ச்சி ஏற்பாடுகளை சங்கபொருளாளர் சங்கர் செய்திருந்தார் நிறைவாக சங்கசெயலாளர் முத்தன் அரசகுமார் நன்றி கூறினார்.

## திருவரங்குளம் ஸ்ரீ அரங்குளநாதர் பெரியநாயகி அம்பாள் கோவிலில் மஹா சனிப் பிரதோஷ விழா



திருவரங்குளம், ஜீலை.2

புதுக்கோட்டை மாவட்டம்திருவரங்குளம் ஸ்ரீ அரங்குளநாதர் பெரியநாயகி அம்பாள் கோவிலில்; மஹா சனிப் பிரதோஷவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக விழாவை முன்னிட்டு நந்திபகவானுக்கு பால், தயிர், மஞ்சள், இளநீர் போன்ற 18வகையான அபிஷேகம் செய்தனர். அதனைத்தொடர்ந்து பக்தகோடிகள் சாமியை பல்லாக்கு மூலம் தூக்கி சிவ சிவ அரோகரா கோஷத்துடன் உள்வளாகவீதியை சுற்றி வந்தனர், தொடர்ச்சியாக கோவில் குருக்கள் தேவாரங்கள் பாடி மஹாதீப ஆராதனை காட்டி பிரசாதங்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் புதுக்கோட்டை, ஆலங்குடி, வடகாடு, மாஞ்சான்விடுதி, கொத்தக்கோட்டை, பூவரசக்குடி ,வாண்டாக்கோட்டை, தோப்புக்கொல்லை முகாம் போன்ற பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள்; கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்,. விழாவிற்கான ஏற்பாடுகளை சிவாச்சாரியார்கள் மற்றும் கோவில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர். கே. நகர் தண்டையார்பேட்டை கருணாநிதி நகர் 2வது தெருவில் வசித்து வரும் ஆட்டோ ஓட்டுனர் ரமேஷ், ஒரு பெண் ஆட்டோவில் தவறவிட்ட 12 பவுன் தங்க நகையை தண்டையார்பேட்டை குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். இந்த ஆட்டோ ஓட்டுனர் நேர்மையே பாராட்டி 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன், அதே பகுதியில் வசித்து வரும் ஆட்டோ ஓட்டுனர் ரமேஷின் வீடு தேடி சென்று அவரை பாராட்டி பரிசு வழங்கினார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் வெண்ணிலா சந்தித்து, பெரியாறு அணை தொடர்பாக 1800-ஆம் ஆண்டு முதல் 1920-ஆம் ஆண்டு வரையிலான 120 ஆண்டுகால வரலாற்றை ஆய்வு செய்து தொகுத்துள்ள "பெரியாறு அணை உருவாகிய வரலாறு" என்ற ஆவண புத்தகத்தை வழங்கினார். உடன் ஆவண காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி துறை ஆணையர் பிரகாஷ், கவிஞர் மு.முருகேஷ் உள்ளார்கள்.

# பெரம்பூர் ஸ்டீபென்சன் சாலை உயர்மட்ட மேம்பாலத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்



கொளத்தூர், ஜூலை. 2-

கொளத்தூர் தொகுதியில் முடிவுற்ற பல்வேறு திட்டங்களை முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று தொடக்கி வைத்தார். பூங்கா, வகுப்பறைகளைத் தொடர்ந்து பெரம்பூர் ஸ்டீபென்சன் சாலை உயர்மட்ட மேம்பாலத்தையும் அவர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வின் போது அமைச்சர்கள் கே.என். நேரு, சேகர்பாபு, சென்னை மேயர் ப்ரியா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ஸ்டீபன்சன் சாலையில் ஓட்டேரி நல்லா கால்வாய்க்கு மேல் செல்லும் வகையில், 824 மீட்டர் நீளத்தில், 66 கோடி செலவில் இந்த மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. பணிகள் தொடங்கி 18 மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மேம்பாலம் திறக்கப்பட்டது.

இந்த பாலம் பயன்பாட்டிற்கு வந்ததையடுத்து கொளத்தூர், பெரம்பூர், திரு.வி.க., நகர் தொகுதி மக்கள் மட்டுமின்றி அவற்றின் சுற்று வட்டாரங்களில் இருந்து, பி.பி., சாலை, கணேசபுரம், புளியந்தோப்பு வழியாக டவுட்டன், வேப்பேரி, சென்ட்ரல், பாரிமுனை செல்வோர் போக்குவரத்து நெரிசலின்றி குறித்த நேரத்தில் பயணிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# காரைக்கால் விவசாய சங்க தலைவர் கலெக்டருக்கு கோரிக்கை




காரைக்கால்,ஜூலை,2

காரைக்கால் கடைமடை பகுதி விவசாய சங்க தலைவர் டி.என்.சுரேஷ் காரைக்கால் விவசாய சங்க தலைவர் கலெக்டருக்கு கோரிக்கை வைத்துள்ளார் அதன் விபரம் வருமாறு, உலகப் பிரசித்தி பெற்ற காரைக்கால் அம்மையார் கோவிலின் மாங்கனி திருவிழா வரும் 2 தேதி நடைபெற இருப்பதால் அந்த மாங்கனி திருவிழாவில் கலந்து கொள்வதற்கு அனைத்து மாநிலங்களிலிருந்தும் மேலும் உள்ளூர் பக்தர்களும் வெளிநாடுகளில் இருந்தும் பல பக்தர்கள் வந்து தனது வேண்டுதலை நிறைவேற்றும் வண்ணம் மாங்கனி இரைப்பதுண்டு அந்த மாங்கனி இறைக்கும் போது பக்தர்கள் அதைப் பிடித்து அமுது படைகளாக உண்டு மகிழ்வார்கள்.

மாங்கொட்டைகளை வீதியில் வீசி எறிந்து விடுவார்கள் அதை காரைக்கால் நகராட்சி மூலமாக சேகரித்து பஜன் கோ கல்லூரி மற்றும் கே வி கே மூலமாக அதை விதைத்து( பலவிதமான மாங்கொட்டைகளும் உண்டு) மரக்கன்றுகளாக மாற்றி மக்களுக்கு இலவசமாக வழங்க மாவட்ட ஆட்சியரை கேட்டுக்கொள்கிறோம் என அந்த அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளார்

# ஆரணி எம்.பி.எஸ்.விவேகானந்தா பள்ளியில் அக்ஷராப்யாசம் நிகழ்ச்சி நடைபெற்றது





ஊத்துக்கோட்டை, ஜூலை2-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி பஜார் வீதியில் எம்.பி.எஸ் விவேகானந்தா நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி இயங்குகிறது.

இப்பள்ளியில், அக்ஷராப்யாசம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதை முன்னிட்டு பள்ளிவளாகத்தில் சிறப்பு பூஜைகள் சிறப்பு ஹோமங்கள் உள்ளிட்டவை நடைபெற்றது. பின்னர், ப்ரீகேஜி மாணவர்களுக்கு அரிசியில் அ என்ற எழுத்து எழுதும் நிகழ்ச்சியும்,நாக்கில் தேன் மூலம் அ என்ற எழுத்து எழுதும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இப்பள்ளியின் தாளாளர் சாந்தம்மா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், ஏராளமான மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், காவல்துறை கூடுதல் இயக்குநராக - நுண்ணறிவு (முழு கூடுதல் பொறுப்பு) பொறுப்பேற்றுக் கொண்ட டாக்டர் கே.ஏ. செந்தில் வேலன், சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



சென்னை பழைய வண்ணாரப்பேட்டை திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் உலக சுற்றுச்சூழல் தினம் சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு 300.க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்துகொண்டு உறுதி மொழி எடுத்து கொண்டு திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் மாணவிகள் கையில் பாதாதைகள் ஏந்தியபடி மனித சங்கிலி ஈடுபட்டனர் பின்னர் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்



விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடம் ரூபாய் 1246 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பணியினை மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.




மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பல்வேறு துறைகளின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் தூய்மைபணியாளர்கள் நலன் சார்ந்த ஆய்வுக் கூட்டத்தில் தூய்மை காப்பாளர்களுக்கு நலவாரியம் உறுப்பினர் அடையாள அட்டையை தேசிய தூய்மை பணியாளர் ஆணையத்தின் தலைவர் வெங்கடேசன் பயனாளிகளுக்கு வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் செள.சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் பிரவீன்குமார், காவல் துணை ஆணையர் அ.பிரதீப் ஆகியோர் உடன் உள்ளனர்.

# இந்திய மருத்துவக் கழக புதிய கட்டிட திறப்பு விழா மற்றும் மருத்துவர்கள் தின விழா





மயிலாடுதுறை, ஜூலை-02:

மயிலாடுதுறை மாவட்டம், வள்ளாலகரம் ஊராட்சி பகுதியில் இந்திய மருத்துவக் கழக மயிலாடுதுறை கிளைக்கு புதிதாக கட்டப்பட்ட கட்டிட திறப்பு விழா மற்றும் மருத்துவர்கள் தின விழா மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி தலைமையில் நடைபெற்றது.

இந்திய மருத்துவ கழக மயிலாடுதுறை தலைவர் மருத்துவர் பாரதிதாசன் வரவேற்புரை ஆற்றினார். பொருளாளர் மருத்துவர் இரத்தின அருண்குமார் புதிய கட்டிட மதிப்பீடு பகிர்வு உரையாற்றினார். இந்திய மருத்துவக் கழக கிழக்கு மண்டல துணைத் தலைவர் மருத்துவர் கோவிந்தராஜன் மற்றும் மூத்த மருத்துவர்கள் முன்னிலை வகித்தனர்.

ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இந்திய மருத்துவ கழக புதிய கட்டிடத்தை மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி திறந்து வைத்தார். மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என். எஸ்நிஷா கட்டிட கல்வெட்டை திறந்து வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்டோர் மருத்துவர்களின் பணியை பாராட்டி சிறப்புரையாற்றினர். மாவட்ட ஆட்சியர் கூறும்போது“கொரோனா காலத்தில் மருத்துவர்களின் பங்கு வார்த்தைகளால் கூறிவிட முடியாது. மயிலாடுதுறை மாவட்ட மருத்துவர்கள் அனைவருமே மிகச் சிறந்த மருத்துவ சேவை புரிபவர்களாக இருப்பது மாவட்டத்திற்கே பெருமை. இந்த கட்டடம் அதற்கு சான்று” என பாராட்டி பேசினார்.

இதில், சுகாதாரப் பணிகள் துறை துணை இயக்குனர் அஜித், ஏ.ஆர்.சி.குழுமத் தலைவர் விஸ்வநாதன், வணிகர் சங்க தலைவர் செல்வம், ஏ.டி.எஸ். குழும நிறுவனங்களின் தலைவர் தமிழ்ச்செல்வன், மருத்துவர் வீரபாண்டியன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். மருத்துவத்துறையில் சேவை ஆற்றி வரும் மூத்த மருத்துவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் சுகாதாரத்துறை அதிகாரிகள், அரசு மருத்துவத்துறை அதிகாரிகள், இந்திய மருத்துவ கழக மருத்துவர்கள், வணிகர் சங்க பிரதிநிதிகள், ரோட்டரி, லயன்ஸ் உள்ளிட்ட பல்வேறு சமூக சேவை சங்கங்களை சார்ந்த பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானனோர் கலந்து கொண்டனர்.

பேசிய மக்கள் மருத்துவர் பாரதிதாசன், “மருத்துவர்களான நம்மை கடவுளுக்கு நிகராக நம்புகிறார்கள். நம்மிடம் வரும் ஒவ்வொரு பேஷண்டையும் நமது உறவாக நினைத்துப் பேணிக் காத்திட வேண்டும். அவர்களை நோயாளியாக மட்டுமே பார்த்துவிட்டுக் கடந்து போகக்கூடாது. இந்த கட்டடம் சாதாரணமாக உருவாகிடவில்லை. பலரது நேரடி உழைப்பும், மறைமுக உழைப்பும் அதிகம். இந்த கட்டடம் உருவாகக் காரணமாக இருந்த அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்” எனப் பேசினார்.

ஊடகவியலாளர் அகஸ்டின் விஜய் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். மயிலாடுதுறை கிளை செயலாளர் மருத்துவர் சௌமித்யாபானு நன்றியுரையாற்றினார்.

# 50 ஆண்டுகள் நிறைவு: பொன்விழா காணும் சென்னை அண்ணா மேம்பாலம்



சென்னை, ஜூலை. 2-

சென்னையின் தொன்மையான அடையாளங்களில் ஒன்றாக திகழும் அண்ணா மேம்பாலம் நேற்றுடன் 50 ஆண்டுகளை பூர்த்தி செய்கிறது.

சென்னையில் 1970ம் ஆண்டு மக்கள் தொகை 20 லட்சத்தை கடந்திருந்தது. இதன் காரணமாக போக்குவரத்து நெரிசலும் அதிகரிக்க தொடங்கியது. அதனை கட்டுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்தும் பெரிதளவில் எதுவும் கைகொடுக்கவில்லை. போக்குவரத்துநெரிசல் அதிகம் இருக்க கூடிய அண்ணா சாலை நுங்கம்பாக்கம் சாலை (உத்தமர் காந்தி சாலை) (கதீட்ரல் சாலை) ராதாகிருஷ்ணன் சாலை ஜி.என்.செட்டி சாலை ஆகியவை சந்திக்கும் புள்ளியில் 1970ம் ஆண்டு நாளொன்றில் ஆயிரக்கணக்கில் வாகனங்கள் கடந்து செல்வதால், ‘பீக் ஹவர்’ நேரத்தில் போக்குவரத்தை கட்டுப்படுத்துவது மிக பெரிய சவாலாகவும் இருந்தது.

இதன் காரணமாக அண்ணா சாலையில் ரூ.66 லட்சம் மதிப்பீட்டில் புதிய மேம்பாலம், மாநில நெடுஞ்சாலை துறையால் கட்டப்படும் என 1969ல் தமிழ்நாடு அரசு அறிவித்தது.

அதன்படி, 1971ம் ஆண்டு மேம்பாலம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. கலைஞர் கருணாநிதி, கட்டுமான பணிக்கு அடிக்கல் நாட்டினார். சுமார் 250 அடி நீளமும், 48 அடி அகலமும் கொண்ட இந்த மேம்பாலத்தின் அப்போதைய மதிப்பு 66 லட்சம் ரூபாய் ஆகும். அனைத்து கட்டுமான பணிகளும் 21 மாதங்களில் முடிக்கப்பட்டு 1973ம் ஆண்டு ஜூலை மாதத்தில் அப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதி திறந்து வைத்தார்.

மேலும் தென்கிழக்கு ஆசியாவில் முதல் மேம்பாலமாகவும், இந்தியாவின் 3வது மேம்பாலமாகவும் திகழ்ந்த இந்த பாலத்துக்கு அண்ணாவின் பெயரை (அண்ணா மேம்பாலம்) அவர் சூட்டினார். 50 ஆண்டுகளை கடந்து கட்டுறுதிவுடன் இருக்கும் இந்த பாலத்தில் லட்சத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் நாள்தோறும் கடந்து செல்கிறது.

மேலும் 50ம் ஆண்டினை சிறப்பிக்கும் வகையில், ரூ.8.85 கோடி மதிப்பீட்டில் தற்போது நடைபெற்றுவரும் சீரமைப்பு பணிகள், விரைவில் நிறைவடைந்து மேம்பாலம் புதுப் பொலிவு பெறவிருக்கிறது.

# அருள்மிகு ஸ்ரீ அரச வல்லப மகாகணபதி மற்றும் ஸ்ரீ கெங்கை அம்மன் ஆலய கும்பாபிஷேக விழா



சென்னை , ஜூலை. 2-

சென்னை, வடபழனி, கெங்கையம்மன் கோயில் பிரதான சாலையில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ அரச வல்லப மகா கணபதி மற்றும் ஸ்ரீ கெங்கையம்மன் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா, சோபகிருது வருடம், ஆனி மாதம் 15 ஆம் தேதி வெள்ளிக்கிழமை, துவாதசி திதியும், விசாக நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபத்தினத்தில் காலை 9:30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் சிம்ம லக்னத்தில் புனராவர்த்தாரண ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

விமான கும்பாபிஷேகத்தை தொடர்ந்து பகல் 10.15 மணி அளவில் மூலஸ்தான கும்பாபிஷேகமும் 10.30 மணிக்கு விபூதி, குங்கும தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து, அம்மன் அலங்காரமும், தீபாரதனை நிகழ்ச்சியும் பகல் 12.00 மணி அளவில் சிறப்பு அன்னதானமும் வழங்கப்பட்டது.

மாலை 5.00 மணிக்கு அம்மனுக்கு சந்தனக்காப்பு அலங்காரமும் ஸஹஸ்ரநாம அர்ச்சனையும் மாலை 6.00 மணிக்கு திருவீதி உலாவும் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கும்பாபிஷேக விழா குழுவினருடன் இணைந்து ஆலய நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

## ஸ்ரீ வரசக்தி விநாயகர் கோயில் அறக்கட்டளை சார்பில்

# பேரிட்டிவாக்கம் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, ஜூலை2-

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம்,பேரிட்டிவாக்கம் ஊராட்சியில் உள்ள தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ-மாணவியர்களுக்கு ஸ்ரீ வரசக்தி விநாயகர் கோயில் அறக்கட்டளையின் சார்பில் தண்ணீர் குவளை,தட்டு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, அறக்கட்டளையின் நிறுவனர் கண்ணன் தலைமை தாங்கினார். தொழிலதிபர் சி.ராமராவ், அறக்கட்டளையின் நிர்வாகி திவ்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில்,சிறப்பு அழைப்பாளராக பேரிட்டிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் வழக்கறிஞர் ஆர். தில்லைகுமார் கலந்துகொண்டு பள்ளியில் பயிலும் மாணவ-மாணவியருக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் தண்ணீர் குவளை,தட்டு உள்ளிட்ட பொருட்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

முன்னதாக அனைவரையும் பள்ளியின் தலைமை ஆசிரியர் சரசு வரவேற்றார். முடிவில்,பேரிட்டிவாக்கம் ஊராட்சி செயலர் பி.தனசேகரன் நன்றி கூறினார்.

# நாமக்கல்லில் கிணற்றில் விழுந்த மாணவர் உள்பட 4 பேர் உயிரிழப்பு மகளைக் காப்பாற்றி தந்தை இறந்த சோகம்



நாமக்கல் , ஜூலை. 2-

ராசிபுரம் அருகே கிணற்றில் தவறி விழுந்த பள்ளி மாணவர்கள் 3 பேரை காப்பாற்ற முயன்ற தந்தை உள்பட 4பேர் கிணற்றில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் தாலுக்கா, நாமகிரிப்பேட்டை அடுத்த மெட்டாலா கணவாய்பட்டியை சேர்ந்த குப்புசாமி மகன் அபினேஷ் (15), கம்மாளப்பட்டி கண்ணன் மகன் நித்தீஷ்குமார் (15), சமத்துவபுரம் பொன்னுசாமி மகன் விக்னேஷ் (13). இதில் அபினேஷ், கண்ணன் ஆகிய இருவரும் அங்குள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 10-ம் வகுப்பும், அதே பள்ளியில் விக்னேஷ் 8-ம் வகுப்பு படித்து வருகின்றனர்.

விடுமுறை நாளான நேற்று மதியம் 1 மணியளவில் ஒரே இரு சக்கர வாகனத்தில் வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளனர். இரு சக்கர வாகனத்தை அபினேஷ் ஓட்டி சென்றார். அப்போது அங்கு சாலையோரம் இருந்த 100 அடி ஆழம் கொண்ட விவசாய கிணற்றில் தவறி விழுந்தனர். அவர்களுக்கு பின்னால் மற்றொரு வாகனத்தில் வந்த அபினேஷ் தந்தை குப்புசாமி (58), கணவாய்பட்டியை சேர்ந்த அசோக்குமார் (38), சரவணன் (35) ஆகிய 3 பேரும் அதிர்ச்சியடைந்தனர். தொடர்ந்து அவர்களை காப்பற்ற 3 பேரும் கிணற்றில் குதித்துள்ளனர். இதில் அபினேஷ், நித்தீஷ்குமார் ஆகிய இருவரும் மீட்கப்பட்டனர். எனினும், விக்னேஷை மீட்க இயலவில்லை. தவிர, அவரைக் காப்பாற்ற முயன்ற குப்புசாமி, அசோக்குமார், சரவணன் 3 பேரும் நீரில் மூழ்கினர்.

தகவல் அறிந்து விரைந்து வந்த ஆயில்பட்டி போலீஸார், ராசிபுரம் தீயணைப்புறையினர் உதவியுடன் கிணற்றில் மூழ்கி 4பேரையும் மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஏறத்தாழ 3 மணி நேர போராட்டத்துக்குப் பின் 4 பேரும் கிணற்றில் இருந்து சடலமாக மீட்க்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக, ஆயில்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கிணற்றில் விழுந்த பள்ளி மாணவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்ட தந்தை உள்பட 4 பேர் உயிரிழந்த சம்பவம், அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதனிடைய, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் ச.உமா, ராசிபுரம் டிஎஸ்பி செந்தில்குமார் ஆகியோர் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

# ஆய்வுக் கூட்டங்களில் அரசியல் கட்சியினர் பங்கேற்பு மன உளைச்சலில் அதிகாரிகள்

தி.மலை: , ஜூலை. 2-

ஆட்சியர் அலுவலகங்களில் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் மக்கள் பிரதிநிதிகள் உடன் அரசியல் கட்சியினர் பங்கேற்று விடுவதால் ஆய்வு கூட்டத்திற்கான முக்கியத்துவம் இல்லாமலேயே போய்விடுமோ என்ற ஐயம் எழுந்துள்ளது.

ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மையமாக வைத்து மத்திய, மாநில அரசுகள் திட்டங்களை வகுக்கின்றன.

அடித்தட்டு மக்களின் வாழ்க்கைக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும், அவர்களை சென்றடைகிறதா? என்பதை கண்காணிக்க, ஐஏஎஸ் அதிகாரிகள் மற்றும் மாவட்ட அளவில் உள்ள ஆட்சியர்களுக்கு உத்தரவு பிறப்பித்து தமிழக அரசு செயல் வடிவம் கொடுத்துள்ளது. இதேபோல், அமைச்சர்கள் மற்றும் ஆட்சியர்கள் தலைமையில் ஆய்வு கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

துறை வாரியான ஆய்வு கூட்டங்களும் நடைபெறுகின்றன. மேலும், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டம் நடத்தப்படுகின்றன. இக்கூட்டங்களில் மத்திய, மாநில அரசு திட்டங்களின் செயல்பாடுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். ஆய்வுக் கூட்டங்களில், திட்டப்பணியில் தொய்வு ஏற்பட காரணமாக உள்ள அரசு அதிகாரிகள் மற்றும் அலுவலர்களிடம் அமைச்சர் மற்றும் ஆட்சியர் உள்ளிட்டோர் கண்டிப்பு



காண்பிக்க நேரிடும்.

திட்ட பணிகள் தொடர்பான ஆய்வு கூட்டம் மற்றும் துறை வாரியான ஆய்வு கூட்டங்களில், அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் செய்துள்ள தவறுகளை சுட்டிக் காட்டி, அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும் நிகழ்வுகளும் இடம்பெறும். துறை ரீதியிலான கூட்டங்களில் துறை அமைச்சர், அரசு அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் மட்டும் பங்கேற்பார்கள்.

அரசு திட்டங்கள் தொடர்பான ஆய்வு கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்கலாம். அந்நியர்களுக்கு அனுமதி கிடையாது. செய்திசேகரிக்கும் செய்தியாளர்களுக்கும் அனுமதியில்லை. இந்நிலையில், மாவட்ட அளவில் அமைச்சர் தலைமையில் நடைபெறும் ஆய்வு கூட்டங்களில் அரசியல் கட்சியினரும் இடம்பெறுகின்றனர். இது கடந்த பல ஆண்டுகளாக தொடர்கிறது.

இந்த நடைமுறையில் அதிமுக, திமுக ஆகிய இரண்டு கட்சிகளும் ஒரே நேர்கோட்டில் பயணம் செய்கின்றன. அரசியல் கட்சியினரும் இடம்பெற்றிருப்பதை ஆட்சியர் உள்ளிட்ட உயர் பொறுப்பில் உள்ளவர்களால் தடுக்க முடியாத சூழல் நிலவுகிறது. பூனைக்கு மணி கட்டுவது யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

திருவண்ணாமலை ஆட்சியர் அலுவலகத்தில் சமீபத்தில் நடைபெற்ற நான்கு நகராட்சிகளில் நடைபெறும் அரசு திட்டங்கள் தொடர்பான ஆய்வு கூட்டத்தில் அரசியல் கட்சியினர் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் செய்தியாளர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இது குறித்து ஆட்சியர் அலுவலகம் தரப்பில் கேட்டபோது, “ஆட்சியர் தலைமையில் துறை ரீதியாக நடைபெறும் கூட்டங்களில் அரசு அதிகாரிகள், அலுவலர்கள் மட்டுமே பங்கேற்கின்றனர். அரசு திட்ட பணிகள் தொடர்பான ஆய்வு கூட்டங்களில் மக்கள் பிரநிதிகள் பங்கேற்கின்றனர். அவர்களுடன் வரும் அரசியல் கட்சியினரும் அரசு அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுடன் இணைந்து இருக்கையில் அமர்ந்து விடுகின்றனர்.

அவர்களை பங்கேற்கக்கூடாது என நேரிடையாக கூறும் சூழல் இல்லை. அரசியல் கட்சியினர் முன்னிலையில், தவறுகளை சுட்டிக்காட்டும் அரசு அலுவலர்களிடம் கண்டிப்பு காட்டும்போது, சங்கடமாக உள்ளது. ஆய்வு கூட்டங்களுக்கு உள்ள முக்கியத்துவத்தை உணர்ந்து, அரசியல் கட்சியினர் பங்கேற்பதை தவிர்க்க, மக்கள் பிரதிநிதிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்” என்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கௌதமபுரம் அடுக்குமாடி குடியிருப்பில் 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பகுதி நேர நூலகக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், என்.ஆர். இளங்கோ, துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ஜெ. இராதாகிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில்

# தமிழக கவர்னர் ஆர். என். ரவியை திரும்பப் பெறக் கோரி கையெழுத்திடும் இயக்கம்

தென்காசி, ஜூலை. 2-

திருநெல்வேலி மாவட்டம்- வள்ளியூர் காமராஜ் சிலை முன்பு தமிழக கவர்னர் ஆர். என். ரவியை திரும்பப் பெறக் கோரி இந்திய ஜனாதிபதிக்கு கையெழுத்திடும் இயக்கம் வள்ளியூர் புறநகர் மதிமுக மாவட்ட செயலாளர் உவரி ரைமண்ட் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய செயலாளர் வெள்ளை பாண்டியன் அனைவரையும் வரவேற்றார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பணகுடி சங்கர் முன்னிலை வகித்தார், கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்த ஒன்றிய திமுக செயலாளர் கிராம்பெல், நாங்குநேரி ஒன்றியச் செயலாளர் பேச்சிமுத்து, களக்காடு துறை அழகன், திருக்குறுங்குடி மணிகண்டன், பரப்பாடி



மதுரா, வள்ளியூர்ஜஸ்டின், விடுதலை கட்சி கிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கலைக்குமார், மனிதநேய கட்சி நிர்வாகிகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள், காங்கிரஸ் கட்சி நகரத் தலைவர் பொன் பாண்டி, மற்றும் திராவிட கட்சி தொண்டர்கள் மதிமுக கையெழுத்து இயக்கத்தில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் எஸ். எம்.ஏ. கென்னடி நன்றி கூறினார் மற்றும் வள்ளியூர் பேரூராட்சி மன்றத் தலைவர் ராதாகிருஷ்ணன், திமுக மாவட்ட துணைச் செயலாளர் நம்பி வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் ராஜா மற்றும் பல்வேறு கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# வரிச்சியூர் செல்வத்தை ஜூலை 5 வரை சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவு

விருதுநகர் , ஜூலை. 2-

கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 5 நாள் போலீஸ் காவலில் விசாரிக்கப்பட்ட பிரபல ரவுடி வரிச்சியூர் செல்வம் விருதுநகர் நீதிமன்றத்தில் சனிக்கிழமை ஆஜர்படுத்தப்பட்டார். அவரை இம்மாதம் 5ம் தேதி வரை சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

விருதுநகர் அல்லம்பட்டியைச் சேர்ந்த தனது கூட்டாளியான செந்தில் (47) என்பவரை சுட்டு கொலை செய்த வழக்கில் பிரபல ரவுடி வரிச்சியூர் செல்வம் கடந்த 21ம் தேதி கைது செய்யப்பட்டார். அருப்புக்கோட்டை ஏ.எஸ்.பி. கருண்கரட் தலைமையிலான தனிப்படை போலீஸார் வரிச்சியூர் செல்வத்தை கைது செய்தனர். 2 நாட்கள் விசாரணைக்குப் பிறகு சாத்தூர் குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு மதுரை மத்திய சிறையில் வரிச்சியூர் செல்வம் அடைக்கப்பட்டார்.

அவரை 7 நாட்கள் போலீஸ் காவலில் விசாரிக்க அனுமதி கோரி விருதுநகரில் உள்ள 2வது நீதித்துறை நடுவர் மன்றத்தில் அருப்புக்கோட்டை ஏ.எஸ். பி. கருண்காரட் கடந்த 23ம் தேதி மனு தாக்கல் செய்தார். இந்த மனு மீதான விசாரணை 26ம் தேதி நடைபெற்றது. அப்போது, ரவுடி வரிச்சியூர் செல்வத்தை 5 நாள் போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதியளித்தும் ஜூலை 1ம் தேதி வரிச்சியூர் செல்வத்தை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நீதித்துறை நடுவர் கவிதா உத்தரவிட்டார்.

இதையடுத்து, வரிச்சியூர் செல்வத்தை அருப்புக்கோட்டை ஏ.எஸ்.பி. கருண்காரட் தலைமையிலான தனிப்படை போலீஸார்



பலத்த பாதுகாப்புடன் விசாரணைக்காக அருப்புக்கோட்டை அழைத்துச்சென்று விசாரணை நடத்தினர். விசாரணை முடிந்து சனிக்கிழமை பிற்பகல் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக வரிச்சியூர் செல்வம் அழைத்துச்செல்லப்பட்டு அவருக்கு மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டன. பின்னர், விருதுநகரில் உள்ள 2வது நீதித்துறை நடுவர் மன்றத்தில் வரிச்சியூர் செல்வம் பலத்த பாதுகாப்புடன் ஆஜர்படுத்தப்பட்டார்.

அப்போது, போலீஸ் விசாரணையின்போது தனக்கு உணவு, உடை, இருப்பிட வசதி செய்து கொடுத்ததாகவும், உடல் அளவிலும் மனதளவிலும் போலீஸார் தன்னை துன்புறுத்தவில்லை என்றும் தெரிவித்தார். இதையடுத்து, வரும் 5ம் தேதி வரை வரிச்சியூர் செல்வத்தை சிறையில் அடைக்க நீதித்துறை நடுவர் கவிதா உத்தரவிட்டார்.

இதையடுத்து, போலீஸ் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டு மதுரை மத்திய சிறையில் வரிச்சியூர் செல்வம் அடைக்கப்பட்டார். மேலும், இக்கொலை வழக்கில் தொடர்புடைய மற்ற நபர்களைக் கைதுசெய்ய சென்னை மற்றும் வட மாநிலங்களில் தனிப்படை போலீஸார் முகாமிட்டுள்ளாதகவும் காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா மெட்ரிக்பள்ளியில் வாசிப்போர் மன்றம் தொடக்க விழா

## தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில செயலாளர் பாலகிருஸ்ணன் பங்கேற்பு

புதுக்கோட்டை, ஜூலை.2-

புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளியில் “வாசிப்போர் மன்றம்” தொடக்கவிழா நடைபெற்றது. மேனாள் தலைமைச் செயலாளர் வெ. இறையன்புவின் ஆலோசனைப்படி தமிழகத்திலேயே முதன்முதலாக மாணவர்களே ஒன்றுகூடி “வாசிப்போர் மன்றம்”; தொடங்கினர்.

இந்த விழாவிற்கு பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி தலைமையேற்றார். சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில செயலாளர் மற்றும் “துளிர்”; மாத இதழின் ஆசிரியர் எஸ்.டி. பாலகிருஸ்ணன் கலந்துகொண்டு மன்றத்தைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

அவர் பேசும்போது “ முன்னாள் தலைமைச் செயலாளர் இறையன்புவால் இன்றைக்கு தமிழகமெங்கும் தொடங்க வேண்டும் என ஆலோசனை

வழங்கப்பட்டுள்ள வாசிப்போர் மன்றம்” என்ற சிந்தனைக்கு பல ஆண்டுகளுக்கு முன்பே செயல் வடிவம் கொடுத்தவர் பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி “நோ புக் டே” எனும் புத்தகமில்லா தினம் கொண்டாடி பாடப்புத்தங்களைத் தாண்டி பல்வேறு நூல்களை வாசிக்கும் பழக்கத்தை மாணவர்களிடம் ஏற்படுத்திய பள்ளி இன்று தமிழகத்திலேயே முதன் முதலாக “வாசிப்போர்



மன்றம்” தொடங்கிய பெருமை கொள்கிறது. இன்றைக்கு நூல்களை மதிப்புரை செய்த மாணவர்கள் மிகச் சிறப்பாக பேசினார்கள். தொடந்து எல்லா மாணவர்களும் நூல்களை வாசிப்பதிலும், படித்ததில் பிடித்ததை விவாதிப்பதிலும் கலந்து கொள்ள வேண்டும்”என்று பேசினார்.

வாசிப்போர் மன்றத்தின் தலைவராக அ.அட்சயா, துணைத்தலைவராக உ. உதயரிஸ்னியாசெயளாலராக மா. ஸ்ரீவர்சன், துணைச் செயலாளர்களாக மா.ரோகித், ச.தாரிகா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். நிகழ்வில் “இப்படிக்கு மரம்” என்ற நூலைப்பற்றி மா.ஸ்ரீவர்சன், “மூன்றாம் உலகப்போர்” எனும் தலைப்பில் மா. ரோகித், கவிஞர் தங்கம் மூர்த்தி கவிதைகள் எனும் நூல்பற்றி அ. அட்சயா ஸ்ரீ, உங்களோடு மூன்றும் நிமிடங்கள்” என்ற தலைப்பில் உ. உதயரிஷ்னியா, “இறையன்பு தகவல் களஞ்சியம்” பற்றி ஷீபா “கனவுகள்” எனும் கதைகள் தாரிகா, “மந்திர கிலுகிலுப்பை” என்னும் கதைகள சர்விகா, கனினி முல்லா கதைகள் என்ற நகைச்சுவை கதைகள் கா.லோகித் ஆகியமாணவர்கள் குறுகிய காலத்தில் பள்ளி நூலகத்திலிருந்து நூல்களைப் பெற்று வாசித்து மதிப்புரை வழங்கினார்கள். விழாவில் பள்ளியின் துணை முதல்வர் குமாரவேல், வழக்கறிஞர் செந்தில்குமார், கல்வித்துறை கணேஷ், மகாத்மா ரவிச்சந்திரன், பேராசிரியர் கருப்பையா, ஒருங்கிணைப்பாளர் கௌரி, காசாவயல்கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு புதிதாக பொறுப்பேற்ற வாசிப்போர் மன்ற நிர்வாகிகளை வாழ்த்தினர். முன்னதாக ஒருங்கிணைப்பாளர் கோமதி பிள்ளை வரவேற்க நிறைவாக தமிழாசிரியர் கணியன் செல்வராஜ் நன்றி கூறினார், நிகழ்வை ஆசிரியர் உதயகுமார் தொகுத்து வழங்கினார்.

# தென்காசியில் பொதிகை அறக்கட்டளை சார்பில் மாபெரும் மாரத்தான் போட்டி

தென்காசி, ஜூலை. 2-

தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு பசுமையை பாதுகாக்கும் விதமாக மரக்கன்று நடுதலை வலியுறுத்தி தென்காசி பொதிகை அறக்கட்டளை சார்பில் மாவட்ட அளவிலான முதலாம் ஆண்டு மாரத்தான் ஓட்டப்பந்தய போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் 9 வயது மாணவர்கள் முதல் 76 வயது முதியவர் வரை பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனி நாடார் மற்றும் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் நாக சங்கர் ஆகியோர் தலைமை வகித்து மாரத்தான் ஓட்ட பந்தய போட்டியினை கொடி அசைத்து துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சிக்கு பொதிகை அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் வழக்கறிஞர் டாக்டர் எஸ் ஆர் கிருஷ்ணன் முன்னிலை வகித்தார், இந்த மாரத்தான் போட்டியானது தென்காசி புதிய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி திருமலை கோயில் அடிவாரம் வரை 14 கிலோமீட்டர் தொலைவில் நடைபெற்றது.



இதில் ஆண்கள் பிரிவில்முதலிடம் பெற்ற அஜித் குமாருக்கு ரூபாய் 30,000ம் பரிசும், இரண்டாம் இடம் பெற்ற பசுபதிக்கு ரூபாய் 20 ஆயிரம் பரிசும், மூன்றாவது இடம் பிடித்த பால சுப்பிரமணியனுக்கு ரூபாய் 10ம் பரிசும், அதேபோல் பெண்கள் பிரிவில் முதல் இடம் பிடித்த சௌமியாவிற்கு ரூபாய் 30,000 ம் பரிசும், இரண்டாவது இடம் பிடித்த கோகிலாவிற்கு 20,000ம் பரிசும், மூன்றாம் இடம் பிடித்த சங்கீதா விற்கு ரூபாய் 10,000ம் பரிசும், மேலும் இந்த போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் மற்றும் மெடல்களும் வழங்கப்பட்டன. பரிசு வழங்கும் நிகழ்ச்சி பண்பொழி ஜாய் பள்ளியில் வைத்து நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் நாக சங்கர் தலைமை வகித்து போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பொதிகை அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் வழக்கறிஞர் டாக்டர் எஸ் ஆர் கிருஷ்ணன் சிறப்பாக செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ் நிர்வாகிகள்மாடசாமி ஜோதிடர், கணேசன், காஜாமைதீன், சந்தோஷ், தேவேந்திரன், சண்முகவேல், சித்திக், சுப்பிரமணியன், செந்தில், பிரேம்குமார், ஈஸ்வரன், தேவராஜன், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஆவுடையார்கோவிலில் மோடி ஆட்சியை வெளியேற்றுவோம் என சிபிஎம்எல் கட்சியினர்கண்டன ஆர்ப்பாட்டம்

*ஆவுடையார்கோவில், ஜூலை.2-*

*மோடி ஆட்சியை வெளியேற்றுவோம் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை பாதுகாப்போம் என்ற பெயரில் ஆவுடையார்கோவில் கடைவீதியில் சிபிஎம்எல் கட்சியினர்கண்டன ஆர்ப்பாட்டம்.*

*புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் கடைவீதியில் நேற்று மோடி ஆட்சியை வெளியேற்றுவோம், ஊரக வேலை உறுதி திட்டத்தை பாதுகாப்போம் என்ற பெயரில்கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆவுடையார் கோவில் சிபிஎம்எல் ஒன்றிய செயலாளர் வீரப்பன் தலைமை தாங்கினார். மாவட்ட குழு உறுப்பினர் சக்திவேல்*



*முன்னிலை வைத்தார், நிகழ்ச்சியில்நாட்டின் பல முக்கிய துறைகளை சீரழித்ததை போலவே அரசாங்கம் தேசிய ஊரக வேலை திட்டத்தையும் சீரழித்து வருகிறது என்றும், 100 நாள் வேலை திட்டத்தில் டிஜிட்டல் வருகை பதிவேடு முறையை ரத்து செய்ய வேண்டும்.*

*100 நாள் வேலை திட்டத்தை இருநூறு நாள் வேலை திட்டமாக மாற்ற வேண்டும், 100 நாள் வேலை திட்டம் கூலியை ரூபாய் 600 ஆக உயர்த்தி வழங்க வேண்டும்.*

*கிராமப்புற ஏழைகளுக்கு மாதம் ரூபாய் 5000 ஓய்வூதியம் வழங்க வேண்டும், கேஸ் சிலிண்டர் விலை ரூபாய் 1200 ஐதாண்டி விட்டதால் சிலிண்டர் விலையை குறைக்க வேண்டும், போன்றகோரிக்கைகளை முன்வைத்து கண்டன ஆர்ப்பாட்டம்நடைபெற்றது, ஆர்ப்பாட்டத்தில் நூற்றிற்கும் மேற்பட்ட பெண்களும் ஆண்களும் கலந்து கொண்டனர், ஆவுடையார்கோவில் காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.*

# மதுரை, சென்னையில் அரசு செயற்கை கருத்தரித்தல் மையம் சட்ட போராட்டத்தால் சாத்தியப்படுத்திய யு.வெரோனிகா மேரி

மதுரை , ஜூலை. 2-

தமிழகத்தில் 150-க்கும் மேற்பட்ட தனியார் செயற்கை கருத்தரித்தல் மையங்கள் உள்ள நிலையில், அரசு மருத்துவமனைகளில் ஒன்றில்கூட இந்த வசதியில்லை. இது தொடர்பாக மதுரையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் யு.வெரோனிகா மேரி உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்நிலையில் மதுரை, சென்னை அரசு மருத்துவமனைகளில் செயற்கை கருத்தரித்தல் மையங்கள் வரும் செப்டம்பரில் செயல்படுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. உணவு பழக்க வழக்கங்களில் ஏற்பட்டுள்ள மாற்றம், சுற்றுச்சூழல் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் நாட்டில் குழந்தையின்மை பிரச்சினையால் 2.75 கோடி தம்பதியினர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஆய்வில் தெரிய வந்ததுள்ளது.

குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகளில் 6 தம்பதிகளில் ஒரு தம்பதியினர் குழந்தையின்மை பிரச்சினையால் பாதிக்கப்படுகின்றனர். தமிழகத்திலும் குழந்தையின்மையால் பாதிக்கப்படும் தம்பதியினரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இப்பிரச்சினையால் கணவன், மனைவி சேர்ந்து வாழ முடியாமல் விவாகரத்துகள் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடன்பட்டாவது செயற்கை முறையில் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலைக்கு தம்பதியினர் தள்ளப்படுகின்றனர். இதை நன்கு புரிந்துவைத்துள்ள தனியார் மருத்துவமனைகள், இச்சிகிச்சைக்கு லட்சக்கணக்கில் கட்டணம் வசூல் செய்கின்றனர்.

2021 ஆண்டு நிலவரப்படி சென்னையில் 59, கோயம்புத்தூரில் 14, மதுரையில் 11 மையங்கள் உட்பட தமிழகம் முழுவதும் 155 தனியார் செயற்கை கருத்தரித்தல் மையங்கள் இருந்தன. தற்போது அந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்திருக்கும். ஆனால், மாநிலம் முழுவதும் உள்ள 35 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 38 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ஒன்றில்கூட செயற்கை கருத்தரித்தல்மையம் இல்லை. இந்நிலையில், மதுரை கே.கே. நகரைச் சேர்ந்த சமூக ஆர்வலரும், பெண்ணுரிமை செயற்பாட்டாளருமான



யு.வெரோனிகா மேரி, தமிழக அரசு மருத்துவமனைகளில் செயற்கை கருத்தரித்தல் மையம் உள்ளதா என்பது குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்டிருந்தார். அதற்கு அதிகாரிகள் தரப்பில் அளிக்கப்பட்ட பதில் மூலம் எந்த அரசு மருத்துவமனையிலும் இந்த மையம் இல்லை என தெரிய வந்தது. இதையடுத்து, அரசு மருத்துவமனைகளில் செயற்கை கருத்தரித்தல் மையத்தை தொடங்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் 2018-ம் ஆண்டில் பொதுநல வழக்கு தொடர்ந்தார். அது தொடர்பான விசாரணை நடைபெற்று வந்தது.

இந்நிலையில், மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மற்றும் சென்னை எழும்பூர் அரசு மருத்துவமனையில் ரூ.5 கோடி செலவில் வரும் செப்டம்பரில் செயற்கை கருத்தரித்தல் மையம் தொடங்கப்படும் என்று தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக யு.வெரோனிகா மேரி கூறியதாவது: சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனின், இந்த அறிவிப்பை வரவேற்கிறேன். அதே நேரம் 2 அரசு மருத்துவமனைகளில் மட்டுமே இந்த வசதியை ஏற்படுத்துவது போதுமானது அல்ல. செயற்கை கருத்தரித்தல் என்பது தொடர் மருத்துவக் கண்காணிப்பில் இருக்க வேண்டிய சிகிச்சை முறையாகும்.

கன்னியாகுமரி, தூத்துக்குடி, நாகப்பட்டினம் உள்ளிட்ட கடலோர மாவட்டங்கள், நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் சென்னை அல்லது மதுரை அரசு மருத்துவமனைக்குச் சென்றுதான் சிகிச்சை பெற வேண்டியிருக்கும். அவர்கள் அடிக்கடி மருத்துவமனைக்கு வந்து செல்வதால் அலைக்கழிப்புக்கு ஆளாவதோடு, கூடுதல் செலவும் ஏற்படும்.

மத்திய அரசின் எய்ம்ஸ் மருத்துவமனைகளில் 2007-ம் ஆண்டே செயற்கை கருத்தரித்தல் மையங்கள் அமைக்கப்பட்டு விட்டன. ஆந்திரா, கேரளா மாநில அரசுகள் தங்கள் மாநிலங்களில் சில ஆண்டுகளுக்கு முன்பே அரசு மருத்துவமனைகளில் இந்த வசதியை ஏற்படுத்திவிட்டன.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் சுகாதாரக் கட்டமைப்புகள் சிறப்பாக உள்ளதாகக் கூறப்படும் தமிழகத்தில், இத்தனை ஆண்டுகளுக்குப் பின்பு தற்போதுதான் 2 அரசு மருத்துவமனைகளில் இந்த வசதி ஏற்படுத்தப்பட உள்ளது. தனியார் மருத்துவமனைகள் செயற்கை கருத்தரித்தல் சிகிச்சை வசதிகளை தொடங்குவதற்கு அரசு சுகாதாரத் துறையின் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகத்திடம் தான் அனுமதி பெற வேண்டும்.


இதுவரை 150-க்கும் மேற்பட்ட தனியார் செயற்கை கருத்தரிப்பு மையங்களுக்கு அனுமதி வழங்கியுள்ள அரசு சுகாதாரத் துறை, அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் இந்த வசதியை ஏற்படுத்துவதில் மெத்தனம் காட்டுவது ஏன்? தனியார் மருத்துவமனைகளின் வளர்ச்சிக்கு மறைமுகமாக அரசு துணை போகிறதா? என்ற கேள்வி எழுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# மகாராஷ்டிராவில் பேருந்து தீ விபத்து 26 பேர் பலியான பரிதாபம்

# திருவண்ணாமலை : பவுர்ணமி தினங்களில் சிறப்பு கட்டண தரிசனம் ரத்து





# நாமக்கல்லில் கிணற்றில் விழுந்த மாணவர்கள் உள்பட 4 பேர் உயிரிழப்பு


சென்னை / புதுக்கோட்டை | 02.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

க. கணபதிப்பிள்ளை , இலங்கைத் தமிழறிஞர், பேராசிரியர் (பி.1903) (இ.1968)



டி. வி. தாமஸ் , இந்திய இடதுசாரி அரசியல்வாதி (பி.1910) (இ.1977)



இராசமனோகரி புலேந்திரன் , இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி.1949) (இ.2014)



மயில்சாமி அண்ணாதுரை , தமிழகப் பொறியலாளர், விண்வெளி ஆய்வாளர் (பி.1958)



## இன்றைய நினைவு நாள்

சேத் பார்னசு நிக்கல்சன் , அமெரிக்க வானியலாளர் (பி.1891) (இ.1963)



டக்லஸ் எங்கல்பர்ட் , கணினிச் சுட்டியைக் கண்டுபிடித்தவர் (பி.1925) (இ.2013)



எலீ வீசல் , இனவழிப்பில் இருந்து தப்பியவர், செயற்பாட்டாளர் (பி.1928) (இ.2016)

